# யா/நாவற்குழி மகா வித்தியாலயம்

# பரிசில் நாள் – 2003

**நிகழ்வு நாள் 30.09.2004**

**வியாழன் காலை 9.30 மணி**

**பிரதம விருந்தினர் :**

கலாநிதி. சபா. ஜெயராசா அவர்கள்
(கல்வியியற் பேராசிரியர், யாழ் பல்கலைக்கழகம்)

**சிறப்பு விருந்தினர் :**

திரு. நா. சத்தியநாதன் அவர்கள்
(கோட்டக் கல்வி அதிகாரி, சாவகச்சேரி)

**பரிசு வழங்கிக் கௌரவிப்பவர் :**

திருமதி. பானுமதி ஜெயராசா அவர்கள்
(ஆசிரியை யா/ இணுவில் மத்திய கல்லூரி)

# யா/ நாவற்குழி மகா வித்தியாலயம்

## பரிசில் நாள் 2003

நிகழ்வு நாள் 30.09.2004

வியாழன் காலை 9.30

## நிகழ்ச்சி நிரல்

- மங்கள விளக்கேற்றல்
- இறைவணக்கம்
- பாடசாலைக் கீதம்
- ஆசியுரைகள்
- வரவேற்புரை
- அதிபர் அறிக்கை
- பரிசில் வழங்கல்
- சிறப்பு விருந்தினர் உரை
- பிரதம விருந்தினர் உரை
- நன்றியுரை
- கலை நிகழ்வுகள்
  - பேச்சு
  - English Singing
  - வரவேற்பு நடனம்
  - நாடகம்
  - குழு நடனம்

MZ 11L

# பாடசாலைக் கீதம்

உயிரினும் இனியநம் உயர்வாழ்வினையே
உணர்வொடு போற்றுவோம் வாரீர்!
ஓங்குக கல்வி செல்வ மோடீகை
ஒளி திகழ் தெய்வீக வாழ்க்கை
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை

- உயிருனும்

ஒரு குல மென உயிர் வாழ்வோம்
உளமதில் நடுநிலை சேர்வோம்
உயர்தர நம துயர் மகாவித்தி யாலயம்
உருவளர் நாவற்குழியினை நினைவோம்
ஓங்குக தேச சுதந்திர மெங்கும்
ஓங்குக சமரச வேட்கை

எமது அழைப்பை ஏற்று பிரதம விருந்தினராக வருகை தந்திருக்கின்ற மதிப்பிற்குரிய **கலாநிதி சபா. ஜெயராசா** அவர்களே, எமது கல்விக் கோட்டத்தின் பெருமைமிகு நிர்வாகியும், எமது முன்னாள் அதிபருமான **திரு மிகு. நா.சத்தியநாதன்** அவர்களே, எமது **மாணவச் செல்வங்களுக்கு பரிசில்கள் வழங்கி கௌரவிக்க வந்திருக்கும் அம்மணி, பானுமதி ஜெயராசா அவர்களே,** மற்றும் இங்கு வருகை தந்திருக்கும் கல்விமான்களே, அயற்பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, பெற்றோர்களே, நலன்விரும்பிகளே, எமது பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களே, கல்விசாரா ஊழியர்களே, மாணவச் செல்வங்களே, உங்கள் அனைவரையும் எமது வித்தியாலயத்தின் பெருமை மிகு இந்நன்நாளில் உளம் நிறைந்த மகிழ்வோடு வருக, வருக என வரவேற்கின்றேன்.

இங்கே எமது அழைப்பை ஏற்று தங்களது நேரத்தை ஒதுக்கி, எமது சிறார்களையும் எம்மையும் கௌரவிக்க வருகை தந்திருக்கும் பிரதம விருந்தினர் அவர்களே, இங்கே இந்தக் கல்விச் சாலையின் ஆசிரியர்களாக பணிபுரியும் பெரும்பாலானவர்கள் தங்கள் மாணாக்கர்களாக இருக்கும் பேறினைப் பெற்றவர்களே, எமது தேசத்தின் கல்வி வளர்ச்சி கருதி, குறிப்பாக முன்பள்ளி மாணவர்களது மேம்பாடு கருதி, தாங்கள் எழுதி வெளியிட்ட பல நூல்களை நாம் கற்று பயன் பெற்றுள்ளோம். குழந்தைகளது உளவியல் தொடர்பாக தாங்கள் எழுதிய கட்டுரைகள், புத்தகங்கள் என்பவற்றைக் கற்றறிந்து எம்மை அதனூடாக வளப்படுத்திய பல சந்தர்ப்பங்களை நாங்கள் பெருமையோடு நினைவு கூருகின்றோம். தங்களிடம் இருந்து, எம் சிறார்களது கல்வி மேம்பாடு, ஆசிரியர் எம் வாண்மை விருத்தி, ஆகியவற்றுக்கு ஊக்கமளிக்கக் கூடிய ஆக்கங்களை எமது கல்விச் சமூகம் இன்னும் இன்னும் எதிர்பார்த்து நிற்கிறது என்பதை பணிவோடு இங்கே கூறி நிற்கிறோம்.

சிறப்பு விருந்தினராக வருகை தந்திருக்கும் எமது கோட்டக்கல்வி அதிகாரியான திரு. நா.சத்தியநாதன் அவர்களே,

எமது பாடசாலையின் கடந்த கால வரலாற்றினையும், இன்றைய நிலையினையும் தாங்கள் நன்கு அறிவீர்கள், எமது வித்தியாலயச் சமூகத்தோடு சிறந்ததொரு தொடர்பினைப் பேணிவரும் தாங்கள். எமது வித்தியாலயத்தை அழுத்திநிற்கும் பௌதீக வளப்பற்றாக்குறைகளினை நன்றாக விளங்கிக் கொண்டுள்ளீர்கள். அந்தச் சுமைகளில் இருந்து எமது வித்தியாலயத்தாய் விடுபட எதிர்வரும் காலங்களிலும் தாங்கள் பங்களிப்பினை நல்குவீர்கள் என நாம் நம்புகின்றோம்.

எமது அழைப்பை ஏற்று, தங்களது பணிகளை ஒத்தி வைத்து இங்கு வருகை தந்திருக்கும் பானுமதி ஜெயராசா அவர்களே, எம்மைப் போன்றே தாங்களும் ஒரு கல்விக் கூடத்திலேயே, கள்ளம் கபடமற்ற பிஞ்சு முகங்களுடன் சேவை புரிவதனால், எமது மாணவர்களது முகங்களுக்கூடாகவே அவர்களது அகங்களை அறியும் வாண்மை கொண்டிருக் கின்றீர்கள். உங்களது அரவணைப்பின் கீழ் இருந்து ஆயிரக் கணக்கான சிறார்கள் நல்லவர்களாக - வல்லவர்களாக சமூகத்துள் உலாவி வருவதனை நாம் அறிவோம். அந்த வகையில் போற்றுதற்குரிய உங்களது பொற்கரங்களால் எமது சிறார்கள் பரிசு பெறுவதையிட்டு அவர்களோடு நாமும் உளம் மகிழ்ந்து நிற்கின்றோம்.

எமது வித்தியாலயத்தின் முந்நாள் பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை உறுப்பினர்களே, தாங்கள் கடந்த பல ஆண்டுகளாக இப்பாடசாலையின் வளர்ச்சியில், குறிப்பாக 2000ம் ஆண்டின் இடப்பெயர்வின் பின், எமது பாடசாலை உரும்பிராய் வசாவிளான் மத்திய மகா வித்தியாலய வளாகத்தில் இயங்கிய போதும், அதன்பின்னர் 2002ல் மீள இங்கே வந்து புனரமைப்புச் செய்து இயங்கவைக்க நடவடிக்கை எடுத்த போதும்; தாங்கள் செய்த சேவைகளை, நானும், எமது வித்தியாலய ஆசிரியர்கள், மாணவர்களும் நன்கு அறிவோம். இதன்போது அதிபராக இருந்த திரு மிகு பிமுத்து லிங்கம் அவர்களது அர்ப்பணிப்புடனான வழிகாட்டுதலுக்காக எமது வித்தியாலயத்தாய் என்றென்றும் அவருக்கு நன்றியுடைய வளாயிருப்பாள் என்பதை இங்கு கூறிவைப்பதில் பெருமை

யடைகின்றேன். இக்கால கட்டத்தில், எமது பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் செயலாளராக இருந்த திருவாளர் செ. குமாரசாமி அவர்களுக்கும், பொருளாளர் திரு. சு. கிருபானந்தன் ஆசிரியர் அவர்களுக்கும் இச்சந்தர்ப்பத்தில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். இடப் பெயர்வின்பின், மிகவும் சேதமடைந்திருந்த இந்த பிரதான மண்டபத்தை, திருத்தி அமைத்து எமது குழந்தைகளது கல்வி மேம்பாட்டிற்கு அளப்பரிய சேவையினை வழங்கிய ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தாருக்கும் எமது வித்தியாலயம் சார்பில் நன்றிகூறக் கடமைப்பட்டுள்ளேன்.

## எமது வித்தியாலய ஆசிரியர் சமூகம்:

தற்போது எமது வித்தியாலயத்தில் நிரந்தர ஆசிரியர்கள் 27 பேரும், நான்கு தொண்டர் ஆசிரியர்களும் கடமையாற்றி வருகின்றனர். இவர்களுள் எமது ஆசிரிய சமூகத்தைச் சேர்ந்த திருவாளர் மா. சிவநேசன் அவர்கள் தற்காலிக இணைப்பில் யா/கைதடி நாவற்குழி அ.த.க.பாடசாலையில் கடமையாற்றி வருகின்றார். எமது வித்தியாலயத்தில் இருந்து பதவியுயர்வு பெற்றுச் சென்று தற்போது யா/கைதடி முத்துக்குமாரசாமி வித்தியாலயத்தில் பிரதி அதிபராக கடமையாற்றிக் கொண்டிருக்கும் திரு. சி.பவளகுமாரன் அவர்களுக்கும் எமது பாராட்டுதல்களையும் நன்றிகளையும் கூறிநிற்கின்றோம்.

எமது வித்தியாலய ஆசிரியர் குழாத்துடன் இணைந்திருந்து, அளப்பெரும் சேவையாற்றி, தற்பொழுது இடமாற்றம் பெற்றுச் சென்றுள்ள திருமதி கு. சிவநடராசா, திருமதி.ப.சந்திரகாசன், செல்வி. யசோதை நடராஜசிவம், திரு. எஸ். கிருஸ்ணராஜா, திரு. ஞா. செல்வநாயகம் ஆகியோரது சேவைகளையும் இன்று இங்கு நாம் நன்றியுடன் நினைவு கூருகின்றோம். எமது வித்தியாலயத்தில் சேவை புரிந்து லண்டனில் உள்ள பல்கலைக்கழகம் ஒன்றுக்கு உயர்கல்வி பெறச் சென்றுள்ள ஆசிரியர் திரு. ச. தயானந்தன் அவர்களது சேவைகளையும் இங்கு நாம் நன்றியுடன் நினைவு

கூருகின்றோம். எமது வித்தியாலயத்தின் விஞ்ஞான ஆசிரியை திருமதி. சி.கோபிராஜ் வெளிநாடு செல்லும் நோக்கில் தனது சேவையில் இருந்து விலகியுள்ளார். அவர்கள் தமது சேவைக் காலத்தில் எமது வித்தியாலயத்துக்கு ஆற்றிய சேவைகளுக்காக இன்று நாம் நன்றி கூறுவதில் பெருமையடை கின்றோம்.

## எமது ஆசிரிய குழாத்தில் புதிதாய் இணைந்தவர்கள்

எமது வித்தியாலயத்துக்கு 2004ம் ஆண்டில் பல புதிய, துடிப்பு மிக்க ஆசிரியர்கள் இடமாற்றம் பெற்றும், முதல்நியமனத் தோடும் வந்து இணைந்துள்ளனர். விஞ்ஞான பாடத்துக்கென திரு. மு. செங்கை ஆழியான் அவர்களும், தமிழ், சமயம் ஆகிய பாடங்களுக்கென கலைப்பட்டதாரி ஆசிரியராக திரு. ந. புகன்சிறீந்திரன் அவர்களையும் ஆரம்பப்பிரிவுக்கென நியமனம் பெற்று வந்துள்ள திரு. ப. கிருபானந்தன், செல்வி. க.புஸ்பராணி அவர்களையும் மனம் மகிழ்ந்து, இரு கைவிரித்து எமது வித்தியாலயத்தாய் வரவேற்பதில் பெருமையடைகிறாள். அத்துடன் எமது விஞ்ஞான ஆய்வு கூடத்துக்கு ஆய்வுகூட உதவியாளராக இட மாற்றம் பெற்று வந்திருக்கும் திரு. எஸ். இராசேந்திரன் அவர்களையும் வரவேற்பதில் மகிழ்வடை கின்றோம்.

## எமது வித்தியாலயத்தின் செல்வங்களாம் மாணவர்களும் அவர்கள் வெளிப்பாடுகளும்

எமது வித்தியாலயத்தாயின் மடியில் இன்றைய தினத்தில் தரம் 01 தொடக்கம் 13 வரையிலான வகுப்புக்களது மாணவர்கள் 613 பேர் கல்விப்பசியைப் போக்கிவருகின்றனர். இவர்களது பரம்பல் பின்வருமாறு காணப்படுகின்றது.

| வகுப்புப்பிரிவு | ஆண் | பெண் | மொத்தம் |
|---|---|---|---|
| 01 – 15 | 129 | 126 | 255 |
| 06 – 09 | 118 | 113 | 231 |
| 10 – 13 | 54 | 73 | 127 |
| மொத்தம் | 301 | 312 | 613 |

எமது வித்தியாலயத்தில் 2003ம் ஆண்டு தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் ஐந்து மாணவர்கள் சித்தியடைந்தமை பெருமைப்படக்கூடிய ஒரு நிகழ்வாகும். இவர்களது இந்த வெற்றிக்கு அயராது உழைத்த எமது வித்தியாலய ஆரம்பக்கல்விப் பகுதித் தலைவர் திருமதி மீ. பரமேஸ்வரன் அவர்களுக்கும், ஆங்கில பாடத்தை இவர்களுக்கு போதித்த திருமதி ந. குகராஜ் அவர்களுக்கும் எமது வித்தியாலத்தாய் தலைசாய்த்து நன்றி கூறி நிற்கின்றாள். அவர்களது தன்னலமற்ற சேவைகாரணமாக, மேலும் மேலும் அவர்கள் தமது பணிநிலைகளில் உயர்வடைய வாழ்த்தி நிற்கின்றோம்.

புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தும் தொடர்ந்தும் தனது கல்வியை எமது வித்தியாலயத்திலேயே பெற்றுவரும் செல்வி. சி. சங்கீதாவிற்கு விஷேட பாராட்டுதல் களை எமது வித்தியாலயத்தாய் தந்து நிற்கின்றாள்.

கடந்த வருடம் நடைபெற்ற க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்கு எமது வித்தியாலயத்தில் இருந்து 41 மாணவர்கள் தோற்றியிருந்தனர். இவர்களுள் பத்து மாணவர்கள் க.பொ.த உயர்தரத்துக்கு தகுதி பெற்றமையினை இங்கு குறிப்பிட்டுக் கூற வேண்டியதாகும். யுத்த நெருக்கீடுகளின் தாக்கம் மற்றும் சமூக பொருளாதார வறுமை நிலைகள், எமது மாணவர்களது கற்றலுக்கு மிகவும் பாதிப்பை ஏற்படுத்தி வருவதை இந்தப் பெறுபேறுகள் காட்டி நிற்கின்றன. இவற்றின் தாக்கத்தில் இருந்து எமது மாணவச் செல்வங்களை மீட்டெடுக்க வேண்டிய பாரிய பொறுப்பு எங்கள் மீதும், உங்கள் மீதும் சுமத்தப்பட்டிருப்பதனை நாம் மிக நன்றாக உணர்ந்து, தக்கவாறு செயற்பட வேண்டிய தருணம் இதுவாகும்.

2004 ஏப்ரல் மாதத்தில் எமது வித்தியாலயத்தில் இருந்து க.பொ.த.உயர்தரப்பரீட்சைக்கு நான்கு மாணவிகள் தோற்றியிருந் தனர். இவர்களுள் மூவர் பல்கலைக்கழக நுழைவுக்கு தகுதி பெற்றிருப்பது பாராட்டக்கூடிய ஒரு விடயமாகும். தகுதி பெற்ற இம் மாணவிகளையும் இவர்களுக்கு

கற்பித்த திரு. நா. கருணா கரன், திரு. ஆ.க. இரவீந்திரன், திருமதி மா. புலேந்திரராசா, திருமதி கோ. சிவனொளிச்செல்வன், திரு க. கதிரவேல் திருமதி. ஞா. மரியநாயகம் ஆகிய ஆசிரியப் பெருந்தகைகளுக்கும் எம் வித்தியாலயத்தாய் நன்றி கூறி பெருமைப்பட்டு நிற்கின்றாள்.

## இணைப்பாடவிதானச் செயற்பாடுகள்

எமது வித்தியாலயத்தின் இணைபாடவிதானச் செயற்பாடுகளில் பிரதானமாக, வருடாந்த இல்ல மெய்வல்லுநர் திறனாய்வானது 10.02.2004 அன்று வெகுசிறப்பாக நடைபெற்றது. யாழ்ப்பாண பல்கலைக்கழக பொருளியல் துறையின் துறைத்தலைவர் பேராசியர். வி.பி.சிவநாதன் அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டமையினை எமது வித்தியாலயச் சமூகம் பெருமையுடன் நினைவுக்கு கொண்டுவருகிறது. இந்த மெய்வல்லுநர் திறனாய்வு நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாக இவ் வித்தியாலயத்தின் பழைய மாணவரான கலாநிதி வெ.திருஞானசம்பந்தரும், தென்மராட்சிக் கல்வி வலயத்தைச் சேர்ந்த உடற்கல்வி முதன்மை ஆசிரியர் திரு. எஸ். சிவகோச்சாரியார் அவர்களும் கலந்து கொண்டு சிறப்பித் திருந்தனர்.

## கல்விக் கண்காட்சி

இந்த வருடம் யூன்மாத இறுதியில் எமது வித்தியாலயத்தில், ஆசிரியர் மாணவர்களது ஆக்கத்திறன்களை வெளிக்கொண்டு வரும் வகையிலான கண்காட்சி ஒன்றினை ஒழுங்கு செய்திருந்தோம். இதற்கு, வெளியே இருந்து பல்வேறு அரச, தனியார் நிறுவனங்களது ஒத்துழைப்பைக் கோரி இருந்தோம். அவர்களது பங்குபற்றலுடன் இரண்டு நாட்கள் நடைபெற்ற இக்கல்விக் கண்காட்சியினை எமது வலயத்தைச் சேர்ந்த பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு. S. உதயகுமார் அவர்களும், கோட்டக் கல்வி அதிகாரி திரு. நா. சத்தியநாதன் அவர்களும் திறந்து வைத்தார்கள். பல அயற்பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள், கல்வியதிகாரிகள், மற்றும் எமது

கிராமமக்களும் வருகை தந்து பார்வையிட்டு பயனடைந்ததையிட்டு எமது வித்தியாலயம் பெருமை கொள்கின்றது.

வலய மட்ட மெய்வல்லுநர் போட்டிகளில் எமது வித்தியாலய அன்னையின் பெருமைமிகு மகள் செல்வி அ.மேரி றொன்ஷியா அவர்கள் 17வயதுப் பிரிவில் 400 மீற்றர், 800 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்று, தன்னை ஈன்றெடுத்த அந்த அன்னைக்கும். தத்தெடுத்த இந்த வித்தியாலய அன்னைக்கும் பெருமை சேர்த்தமையையிட்டு. அவரை நாம் பாராட்டி நிற்கின்றோம்.

அதே வலயமட்ட மெய்வல்லுநர் திறனாய்வில் செல்வன் சி. றஜிதாஸ் அவர்கள் 19 வயதுப் பிரிவில் 400 மீற்றர் தடைதாண்டல் ஓட்டத்திலும் நீளம்பாய்தலிலும் செல்வன் இ. கபில்ராஜ் அவர்கள் 17 வயதுப்பிரிவில் முப்பாய்ச்சல் போட்டியிலும் முதலாம் இடங்களைப் பெற்று, வித்தியாலய அன்னையின் புகழை உயர்த்தி நின்றனர். அவர்களுக்கும் இங்கே பாராட்டினையும், நன்றியினையும் தெரிவிப்பதில் மகிழ்வடைகின்றேன். இவர்களோடு, செல்வன் ஜெ. தார்மீகன் அவர்கள் 17 வயதுப் பிரிவிலும் செல்வி சி.சுயனகா அவர்கள் பெண்களுக்கான 17 வயதுப் பிரிவிலும் நீளம் பாய்தலில் முதலாம் இடத்தைப் பெற்றுக் கொண்டதனை இங்கு பெருமையோடு உங்கள் முன் கூறி நிற்கின்றோம். வெற்றிபெற்ற எமது மாணவச் செல்வங்கள் அனைவருமே மாவட்ட மட்டப் போட்டிக்கு தெரிவாகியுள்ளனர்.

வலய மட்டத்தில், நடைபெற்ற உதைபந்தாட்டப் போட்டிகளில் எமது மாணவர்கள் 14 வயதுப்பிரிவில் மூன்றாம் இடத்தையும். 16 வயதுப் பிரிவில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டனர். இதில் 16 வயதுப் பிரிவினர் மாவட்டத்தின் பல்வேறு பாடசாலைகளதும் மாணவ அணிகளுடன் போட்டிகளில் ஈடுபட்டமையையும் குறிப்பிட்டுக் கூற வேண்டியுள்ளது. வலய மட்டக் கிரிக்கற் போட்டியின் போது, எமது பாடசாலை 2004ம் ஆண்டு 3ம் இடத்தைப் பெற்றமையையும் குறிப்பிட வேண்டியுள்ளது.

சஞ்ஜீவன் ஞாபகார்த்த மென்பந்து கிறிக்கற் போட்டியில் எமது பாடசாலை அணியினர் வலய மட்டத்தில் இரண்டாம் இடத்தினைப் பெற்று வித்தியாலயத்துக்கு பெருமை சேர்த்தனர். இவர்கள் மாவட்ட மட்டப் போட்டிகளிலும் கலந்து கொண்டு தமது திறமைகளை வெளிக்காட்டியமையையும் இங்கு கூறிவைப்பதில் பெருமையடைகின்றோம்.

மாணவர்களுக்கிடையிலான உடற்பயிற்சிப் போட்டிகளில், 16 வயதுப்பிரிவில் பெண்கள் அணியினர் பங்குபற்றி அரையிறுதி ஆட்டத்துக்கு தெரிவு செய்யப்பட்டமையை இங்கே தெரிவிப்பதில் நாம் மகிழ்வடைகின்றோம்.

இவ்வகையில், இந்த மாணவர்கள் தமது திறன்களை வெளிப்படுத்தி, அதனூடாக எமது வித்தியாலயத்துக்கு பெருமை சேர்த்திட அயராது பாடுபட்ட ஆசிரியர் திரு. சி. மதியழகன் அவர்களைப் பாராட்டி நிற்கின்றேன். அத்துடன் அவர்களுக்கு உறுதுணையாகச் செயற்பட்ட விளையாட்டுச் செயற்குழு உறுப்பினர்கள் திரு. ஆ.க இரவீந்திரன், திரு. சு.கிருபானந்தன், திரு. வே.க. சந்திர குமார், திருமதி யோ. பாலச்சந்திரன், திருமதி ஞா.மரியநாயகம், செல்வி ச. சத்தியமலர் ஆகியோரைப் பாராட்டுவதில் மகிழ்வடைகின்றோம்.

இவற்றுக்கு அப்பால் கெல்ப் ஏஜ் எனப்படும் முதியோர் நலன் பேணல் அமைப்பு தேசிய ரீதியாக நடாத்திய கட்டுரைப் போட்டியில், கனிஷ்ட பிரிவில் எமது வித்தியாலய மாணவி செல்வி. வி. லவப்பிரியா அவர்கள் தேசிய மட்டத்தில் இரண்டாம் இடத்தைப் பெற்று. கொழும்பில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் கலந்து கொண்டு பணப்பரிசிலையும், சான்றிதழையும் பெற்றுவந்துள்ளார். இவரால் எமது வித்தியா லயத்தாய் இன்னுமொருதடவை மெய்சிலிர்க்க பெருமையடை கின்றாள். செல்வி. வி. லவப்பிரியா அவர்களையும், இதே போட்டியில் சிரேஷ்ட பிரிவில் கலந்து கொண்டு சான்றிதழ் பெற்ற செல்வி பா.கிருபாலினி அவர்களையும் நாம் பாராட்டி மகிழ்வடைகின்றோம்.

மற்றும் தமிழ்மொழித் தினப் போட்டிகள், ஆங்கில மொழித் தினப் போட்டிகள், சைவசமயம், சமூகக்கல்வி விவசாயம், வணிகப் போட்டிகளிலும் எமது வித்தியாலய மாணவர்கள் கலந்து கொண்டு சான்றிதழ்கள் பெற்றுள்ளனர். ஆரம்பப்பிரிவு மாணவர்கள் திருக்குறள் மனனப் போட்டிகளில் கலந்து கொண்டு நான்கு இடங்களையும். அறநெறிப் போட்டிகளில் கலந்து கொண்டு நான்கு இடங்களையும் வலய மட்ட சிறுவர் நாடகப் போட்டியில் 1ம் இடத்தையும் பெற்றுக் கொண்டுள்ளனர். இவர்கள் இவ்வாறு இந்த இடங்களைப் பெற, இவர்களை வழிநடாத்திய அனைத்து ஆசிரியர்களையும் இச் சந்தர்ப்பத்தில் பாராட்டுவதில் பெருமை கொள்கின்றேன்.

## மேலதிக வகுப்புகள்:

யுத்தச் சூழலும், அதனுடன் இணைந்த இடப் பெயர்வுகளும் காரணமாக, எமது பாடசாலை மாணவர்களின் கல்வி அடைவு மட்டம் குறைவாக இருந்தமை எம்மால் அவதானிக்கப்பட்டது. எனவே அவற்றை நிறைவு செய்யும் வகையில் மேலதிக வகுப்புக்கள் காலை, மாலை வேளைகளிலும், மற்றும் விடுமுறை நாட்களிலும் சகல வகுப்பைச் சேர்ந்த மாணவர்களுக்கும் ஏறக்குறைய அனைத்து ஆசிரியர்களுமே போடப்பட்ட நேரசூசிகை ஒழுங்கில் மேலதிக கற்பித்தல் செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்தனர். இது காரணமாக எமது மாணவச் செல்வங்களது அடைவுகளில் ஒரு உயர்வு காணப்பட்டதனை இங்கே நான் குறிப்பிட விரும்புகின்றேன். அந்த வகையில் இந்த அடைவுமட்ட உயர்வுக்காக அர்ப் பணிப்புடன் சேவை புரிந்த அனைத்து ஆசிரியர்களையும் பாராட்டி நன்றிகூறி நிற்கின்றேன். குறிப்பாக திரு. தி. அற்புதராஜா, திருமதி. மீ. பரமேஸ்வரன், செல்வி. ச. தயாநிதி, ஆகியோருக்கு நன்றி கூறுவதில் பெருமையடைகின்றேன்.

இச்சந்தர்ப்பத்திலே, எமது வித்தியாலயத்தின் பரிகாரக் கற்பித்தல் வகுப்புக்களை முன்னெடுத்துவரும் இரண்டு

ஆசிரியர்களுக்கான உபகாரக் கொடுப்பனவுகளை வழங்க உதவிவரும், கனடாவிலுள்ள நலன்விரும்பி திரு. நிக்ஷன் யோகராசா அவர்களையும், சாவகச்சேரி பங்குத்தந்தை வணக்கத்துக்குரிய இ.இரவிச்சந்திரன் அடிகளார் அவர்களையும் நன்றியுடன் குறிப்பிட விரும்புகின்றேன். இவர்கள் புரியும் நிதி உதவி பல மாணவர்களது கல்வித் தேவையைப் பூர்த்தி செய்து வருகிறது என்பது வெளிப்படையானது.

எமது வித்தியாலயத்தில் க.பொ.த சாதாரண தரத்தில் இறுதிப் பரீட்சை எழுதும் மாணவர்களில் திறமைச் சித்தி பெறும் மூன்று மாணவர்களுக்கு தலா 20,000/= 10,000/=, 5,000/= என்ற வகையில் புலமைப் பரிசில் ஒன்றினை வழங்க இல. 100, அம்மன் கோவில் வீதி, நாவற்குழியில் வசிக்கும் திரு. வி. நடராஜா என்ற பெருமகன் முன் வந்தள்ளமையை நன்றியோடு இங்கே கூறி நிற்கின்றேன். "திரு. திருமதி வைரமுத்து ஞாபகார்த்த புலமைப் பரிசில்" என்ற இந்த புலமைப் பரிசில் திட்டமானது, திரு. விநாசித்தம்பி வைரமுத்து அவர்களதும், திருமதி தங்கம்மா வைரமுத்து அவர்களதும் நினைவாக வழங்கப்பட இருப்பது குறிப்பிடத்தக்கதாகும். இந்த வருடம் க. பொ. த. சாதாரண பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களில் இருந்து இந்த புலமைப் பரிசில் திட்டம் ஆரம்பமாகின்றது.

## சமய விழாக்கள்:

வருடம் தோறும் எமது வித்தியாலயத்திலே சைவசமயம், கிறிஸ்தவ சமயம் என்பவற்றுடன் தொடர்பான விழாக்களை ஒழுங்கமைத்து நடாத்தி வருவதனை நீங்கள் யாவரும் அறிவீர்கள். பிரதி வெள்ளிக்கிழமை தோறும் பஜனை வழிபாடுகள் நடாத்தி வருவதுடன். நாயன்மார் குருபூசைத் தினங்கள், மற்றும் நவராத்திரி விழா போன்றவற்றையும், ஒளிவிழாவினையும் சிறப்பாக செய்து வருகின்றோம். இவற்றோடு தொடர்புடையதாக நடாத்தப்படும் போட்டிகளில் வெற்றியீட்டும் மாணவர்களுக்கு வாணி விழாவின் போதும், ஒளிவிழாவின் போதும் பரிசில்கள் வழங்கி ஊக்கப்படுத்தி வருகின்றோம்.

இவற்றினை திறம்பட நடாத்தி முடிப்பதற்கு எமது வித்தியால யத்தினது இந்துமா மன்றமும், கிறிஸ்தவ மன்றமும் அரும்பணி யாற்றி வருகின்றன. கிறிஸ்தவ மாணவர்களின் நன்மை கருதி மறைக்கல்வி நிலையம் பரீட்சைகளை நடாத்தி சான்றிதழ்களை வழங்கி வருகின்றது. கடந்த வருடம் இப்பரீட்சையில் தோற்றிய செல்வி அ.மேரிறொன்ஷியா, செல்வன். தோ. டினா ஆகியோர் சிறப்புத் தேர்ச்சிகளை அடைந்து சான்றிதழ்களைப் பெற்றுக் கொண்டனர். எமது வித்தியாலயத்தில் கடந்த வருடம் ஒளிவிழாவின்போது சாவகச்சேரி பங்குத்தந்தை இ.ரவிச்சந்திரன் அடிகளார். ஒளிவிழா நிகழ்விற்கான அனைத்து பரிசில்களையும் தந்ததுடன். வித்தியாலய மாணவர்களது கல்வி வளர்ச்சிக்காக தன்னாலான உதவிகளை வழங்கி வருவதனையும் குறிப்பிட விரும்புகின்றேன். பங்குத் தந்தை அவர்களுக்கு எமது வித்தியாலய சமூகம் நன்றி கூறி நிற்கின்றது.

## மாணவர்களுக்கான போசாக்கு உணவு வழங்கல்:

கடந்த 2003 ஆகஸ்ட் மாதம் முதல் எமது வித்தியாலயத்தின் ஆரம்பப்பிரிவைச் சேர்ந்த ஏறக்குறைய 254 மாணவர்களுக்கு போசாக்கு உணவு வழங்கும் திட்டத்தினை ஆரம்பித்தோம். ஒழுங்கான மாணவர் வரவைத் தூண்டுவதும், அவர்களது கற்றல் செயற்பாட்டை மேம்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்தச் செயற்திட்டமானது ஆரம்பத்தில் ஒருசில பெற்றோர்கள் நலன்விரும்பிகள் மற்றும் பல ஆசிரியர்களது நிதிப் பங்களிப்புடனேயே ஆரம்பிக்கப்பட்டது. பின்னர் அப்போதைய இந்து கலாச்சார அமைச்சர் திரு. தி.மகேஸ்வரன் அவர்களோடு தொடர்பு கொண்டபோது, அவர் முதற்கட்டமாக 100,000/- ரூபாய்களும், இரண்டாம் கட்டமாக, நாவற்குழி பொதுசன நூலக அபிவிருத்திச் சங்கத்துக்கூடாக 50,000/- ரூபாய்களுமாக மொத்தம் 150,000/- தந்துதவினார்கள், அந்த நிதியுதவியுடன் இவ்வருடம் யூலை மாதம்வரை எம்மால் எமது மாணவச் செல்வங்களுக்கு போசாக்கு உணவு வழங்கப்பட்டு வந்தது. தற்போது உலக வங்கி உதவியுடன் இந்த போசாக்கு

உணவுத்திட்டம் முன்னெடுக்க உள்ளதனால், நாம் வழங்கிவந்த போசாக்குஉணவு வழங்கும் திட்டத்தை இடைநிறுத்தியுள்ளோம். தற்போது எம்மால் உலகவங்கி உதவியுடனான போசாக்குணவு வழங்கல் திட்டத்துக்காக ஒரு சமையல் அறை அமைக்கும் வேலைகள் நடைபெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

## சாரணியம்:

எமது வித்தியாலயத்தில் இயங்கிவரும் சாரணிய அமைப்பினில், குருளை சாரணர் பிரிவும், சாரணர் பிரிவும் இயங்கி வருகின்றது. இவர்களுக்கு பொறுப்பாசிரியராக திரு. நா.கருணாகரனும், செல்வி சு. சுபாங்கினியும், செல்வி. க. துளசியும் பொறுப்பாக இருந்து சிறப்பாக கடமையாற்றி வருவதனைக் குறிப்பிடல் வேண்டும். எமது சாரணர்கள். காலியில் நடைபெற்ற 6வது தேசிய ஜம்போறி, காலிக்கான சமாதான மோட்டார் சைக்கிள் யாத்திரை, வேலைவாரம் போன்ற பல்வேறு நிகழ்வுகளில் பங்குபற்றி தமது திறன்களை வெளிப்படுத்தி வருகின்றனர்..

## மாணவ முதல்வர் சபை:

எமது வித்தியாலய மாணவர்களிடையே, ஒழுங்கு, கட்டுப்பாடு என்பவற்றைப் பேணுவதில் ஆசிரியர் குழாத்துக்கு உதவியாக மாணவ முதல்வர் சபை செயற்பட்டு வருகிறது. இச் சபையிலே ஆசிரியர்களால் சிபார்சு செய்யப்பட்டு. அதிபரினால் நியமிக்கப்பட்ட தரம் 9 தொடக்கம் தரம் 13 வரையிலான இருபத்தைந்து மாணவர்கள் இணைக்கப்பட்டிருக்கின்றனர். இவர்கள் அனைவருமே தமது கடமைகளைச் சிறப்பாக ஆற்றி வருவதனை இட்டு, அவர்களை நான் பாராட்டி நன்றி கூறுகின்றேன். இவர்களை நெறிப்படுத்தும் ஒழுக்காற்றுச் சபை உறுப்பினர்களுக்கும் உப அதிபர் திருமதி. சு. செல்வராசா அவர்களுக்கும் எனது நன்றிகளை இச்சந்தர்ப்பத்தில் தந்து நிற்கின்றேன்.

## மாணவர் வரவு:

எமது பகுதியின் கல்வி வளர்ச்சியை மேம்படுத்த எமது வித்தியாலயத்தின் முழு வளமுமே அர்ப்பணிப்புடன் தயாராக இருக்கிறது. இருந்தும் அவற்றில் இருந்து உயரிய பயனைப் பெற்று, தம்மை முன்னேற்றும் நோக்கம் எமது மாணவர் மத்தியில் குறைவாக இருப்பதை மிகச் சமீபகாலமாக எம்மால் உணரமுடிகிறது. இங்கு வருகை தந்திருக்கும் பெற்றோர்களே, உங்களிடம் நான் தாழ்மையாக ஒரு விடயத்தைக் கோரிநிற்கின்றேன். தயவு செய்து உங்கள் பிள்ளைகளை ஒழுங்காக பாடசாலைக்கு அனுப்பி உதவுங்கள். அவர்கள் மத்தியில் காணப்படும் வரவு ஒழுங்கீனம் அவர்களது கற்றல் செயற்பாட்டையும், எமது கற்பித்தல் செயற்பாட்டையும் மிக மோசமாகப் பாதித்து நிற்கின்றது.

## வளத்தேவைகள்:

### 1. நூலக வசதிகள்:

இன்றைய கல்விச் சிந்தனைகளின் படி பாடசாலைகளில் நூல் நிலையமானது கற்றல் - கற்பித்தல் வள நிலையம் என மேம்படுத்தப்பட்டு வருகிறது. எமது வலயத்தில் கூட சுமார் ஐந்து பாடசாலைகளுக்கு ஏற்குறைய 20 இலட்சம் ரூபா செலவில் ஒவ்வொரு பாடசாலைகளுக்கும் அமைச்சினால் கற்றல் கற்பித்தல் வள நிலையங்கள் அமைத்துக் கொடுக்கப்பட்டுள்ளன. எமது பாடசாலைகளில் அவ்வகை வசதிகள் ஏற்படுத்தித் தராத நிலையிலும் 40' x 20' விஸ்தீரணமுள்ள வகுப்பறையில் பற்றாக்குறைகளின் மத்தியில் நூலகத்தை (கற்றல் கற்பித்தல் வள நிலையத்தை) இயக்கி வருகின்றோம். பல்வேறு உதவித் திட்டத்தின் கீழும் வலயக் கல்வித்திணைக்களத்தினால் பல பெறுமதிமிக்க நூல்கள் எமக்கு தரப்படுகின்றன. அவற்றிற்கு மேலதிகமாக ஆண்டு தோறும் பல்வேறு நிதிகளுக்கு ஊடாக நாம் வித்தியாலயத்தினாலும் ஆயிரக்கணக்கான ரூபாய்களுக்கு நூல்கள் வாங்கிவருகின்றோம். அவற்றை மாணவர்கள்

வினைத்திறனுடன் பயன்படுத்த போதுமான தளபாட வசதிகளோ. இடவசதிகளோ இல்லாது சிரமம்படும் ஒரு நிலை தற்போது உள்ளது. இந்த நிலையைப் போக்குவதற்காக நாம் பாராளுமன்ற உறுப்பினர். திரு. கஜேந்திரகுமார் பொன்னம் பலம் அவர்களோடு தொடர்பு கொண்டபோது. இந்த வருட பன்முகப்படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட நிதியில் ரூபாய் 100,000/- ஒதுக்கியிருப்பதாக அறிவித்துள்ளார். இந்த நிதி உதவி கிடைக்கும் பட்சத்தில் எமது நூலகத்துக்கான ஒரு பகுதித் தளபாடத் தேவையை எம்மால் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும்.

கடந்த வருடம் பல்வேறு அன்பர்களும் தாமாகவே எமது நூலகத்துக்கு நூல்களை அன்பளிப்புச் செய்துள்ளனர். அவற்றுள் முந்நாள் இந்து கலாச்சார அமைச்சர், திரு. தி.மகேஸ்வரன், அராலியூர் ந.சுந்தரம்பிள்ளை, மற்றும் யாழ்ப்பாண பொதுசன நூல்நிலைய பிரதம நூலகர் திரு.S. தனபாலசிங்கம் ஆகியோர் குறிப்பிடக் கூடியவர்களாகும். இவர்களுக்கு எமது வித்தியாலயத்தின் சார்பில் நன்றிகளைக் கூறி நிற்கின்றோம்.

எமது வித்தியாலய நூல்நிலையத்தை கற்றல் - கற்பித்தல் வள நிலையமாக முழுமையான வகையில் மாற்றியமைக்க உதவக்கூடிய அன்பு உள்ளங்களை வித்தியா லயத்தாய் வரவேற்று நிற்கின்றாள். எமது கிராமத்தைச் சேர்ந்த திரு. வ. அழகராசா என்பவர் பன்னிரெண்டு பிளாஸ்ரிக் கதிரைகளை வாங்கி அன்பளிப்பாக தந்துள்ளதனை இந்தச் சந்தர்ப்பத்தில் நன்றியோடு கூறிநிற்கின்றேன்.

## 2. விஞ்ஞான ஆய்வு கூடம்:

எமது வித்தியாலயத்திலே ஆறாம் தரத்துக்கு மேல் ஏறக்குறைய 360 மாணவர்கள் வரை தற்போது கல்வி பெற்று வருகின்றனர். இவர்களுக்கு உதவக்கூடிய வகையில் ஒரு முழுமையான விஞ்ஞான ஆய்வு கூடம் இல்லாதது ஒரு பெரிய குறைபாடாகவே எம்மை அழுத்துகிறது. 20' x 10'

அடிகள் விஸ்தீரணமுள்ள ஒரு இருண்ட அறையிலேயே, தற்போது எமது விஞ்ஞான ஆய்வுகூட உபகரணங்களைக் களஞ்சியப்படுத்தி வைத்திருக்கின்றோம். அந்த அறையையே ஆய்வுகூடமாகவும் பயன்படுத்தி வருகின்றோம். திறமை மிக்க ஆசிரியர்கள்.மற்றும் உதவியாளர் ஆகியோர் இருந்தும் அவர்களது வினைத்திறன் மிக்க ஆற்றல்கள் மாணவரைச் சென்றடைய ஆய்வுகூட வசதிகள் இல்லாதிருப்பது ஒரு பெரிய குறையாகவே உள்ளது. எமது மதிப்புமிகு கோட்டக்கல்வி அலுவலர் அவர்களே, தங்களால் முடியுமான பொருத்தமான செயற்பாடுகளுக்கூடாக, எமது இக்குறையினைப் போக்க ஆவண செய்துதவுமாறு எமது வித்தியாலயச் சமூகத்தின் சார்பாக வேண்டி நிற்கின்றேன். இச்சந்தர்ப்பத்தில் எமது கிராமத்தைச் சேர்ந்த திரு. நிக்ஷன் யோகராசா என்பவர் பெறுமதிமிக்க ஒரு நுணுக்குக்காட்டியை எமது ஆய்வுகூடத்துக்கு அன்பளிப்பாக தந்துள்ளதனை நன்றியோடு கூறிநிற்கின்றேன்.

## 3. குடிநீர் வசதி:

எமது வித்தியாலய மாணவர்கள் எதிர்நோக்கும் மிகப்பெரிய பிரச்சனையாக இதுவே உள்ளது. இந்த வருட ஆரம்பத்தில், கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் திரு. ந.ரவிராஜ் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க யூ.என்.எச்.சி.ஆர் நிறுவன நிதியுதவியுடன். பாடசாலைக்கு அருகில் உள்ள குளத்தின் கரையிலுள்ள குடிநீர்க் கிணற்றின் புனரமைப்பு வேலைகளை எமது வித்தியாலய அபிவிருத்திச் சங்கம் மேற்கொண்டிருந்தது. இந்த திட்டத்தின் கீழ், ஒரு நீர் இறைக்கும் இயந்திரமும் பாடசாலைக்கு யூ.என்.எச்.சி.ஆர் நிறுவனத்தினால் வழங்கப் பட்டிருந்தது. இருப்பினும் பொதுச் சுகாதார பரிசோதகரால். தாங்கள் அனுமதி தரும்வரை அந்த கிணற்று நீரைப்பாவிக்க வேண்டாம் என ஆலோசனை கூறியதற்கமைய அக்கிணற்றில் இருந்து நீர் பெறுவதை தவிர்த்து வருகின்றோம்.

இப்பாடசாலையின் நலன்விரும்பிகளில் ஒருவரான திரு. கதிர்காமநாதன் விஜயநாதன் அவர்களால் 2000 லீற்றர் கொள்ளளவுள்ள பிளாஸ்ரிக் குடிநீர்த்தாங்கி ஒன்று அன்பளிப்புச் செய்யப்பட்டுள்ளது. இதனைப் பயன்படுத்தி, குடிநீர் மற்றும் மலசலகூடங்களுக்கான நீர் விநியோகத்தைச் செய்ய, பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தினால் இரும்பினாலான ஒரு மேடை அமைக்கப்பட்டுள்ளது. தற்போது பாடசாலை வளவினுள் உள்ள கிணறின்மூலமும். சுரண்டிக் குளத்தின் அருகிலுள்ள கிணற்றின் மூலமும் மாணவர்களது நீர்த்தேவையைப் பூர்த்தி செய்யும் நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றோம்.

## 4. கட்டிடவசதிகள்:

எமது மாணவர்களது கற்றல் கற்பித்தல் வசதிகருதி வடகிழக்கு மாகாண சபை நிதியுதவியின் கீழ் ஏற்கனவே இருந்த வகுப்பறை ஒன்றினை மாற்றி அமைத்து, ரூபாய் 150,000/- செலவில் கட்புல செவிப்புல சாதன அறை ஒன்று உருவாக்கித் தரப்பட்டுள்ளது. இதற்கு என கடந்த மாதத்தில் ஒரே ஒரு C.D பிளேயர் தரப்பட்டுள்ளது. இந்த அறையினைப் பயன்படுத்தி மாணவர்களது கற்றல் - கற்பித்தல் செயற்பாட்டினை மேம்படுத்த எமக்கு இன்னும்பல சாதனங்கள் அவசியமாயுள்ளன. மின்பிறப்பாக்கி, கணனி, ஓவர்கெற் புரஜெக்டர், போன்றவாறான சாதனங்கள் இல்லாதிருப்பது. அமைக்கப்பட்ட அந்த அறையின் பயன்பாட்டினை தாழ்த்தி நிற்கின்றது. இவ்வகைச் சாதனங்களைப் பெற நாம் முயன்று வருகின்றோம்.

ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனம் எமக்கு வசதிமிக்க ஒரு மலசலகூடத்தை நவீனமுறையில் அமைத்துத்தந்துள்ளது. அதற்காக அந்த நிறுவனத்துக்கு நாம் நன்றிகூறிநிற்கின்றோம். நீர் விநியோக வசதி இன்மையால் அவற்றையும் முழுமையாகப் பயன்படுத்த முடியாத நிலையில் நாம் உள்ளமை எமக்கு கவலைதரும் ஒரு விடயமாகவே உள்ளது.

இங்கே இந்த மலசல கூடத்தை அமைக்கும் செயற்திட்டத்தில் ஈடுபட்ட பாடசாலை அபிவிருத்திச் சங்க

அனைத்து செயற்குழு உறுப்பினர்களையும் குறிப்பாக. இணைப்பாளராக கடமையாற்றிய நலன்விரும்பியான திரு. யூதாதேயுபிலிப் அவர்களையும் நான் நன்றியுடன் குறிப்பிட்டு நிற்கின்றேன்.

## 5. அழகியல் பாடங்களுக்கான வளப்பற்றாக் குறைகள்:

எமது வித்தியாலயத்தில் இன்று உள்ள மாணவர் தொகையின் படி 358 மாணவர்கள் அழகியல் பாடங்களில் ஏதோ ஒன்றைப் பயின்று வருகின்றனர். சங்கீதம், நடனம், சித்திரம் என்ற இந்த பாடத்தெரிவில் எமது பாடசாலைச் சிறார்களுக்கு நடன பாடத்துக்கென ஒரு நிரந்தர ஆசிரியர் நியமிக்கப்படாதது மிகப் பெரிய குறையாகவே எம்முன் உள்ளது. தகுதி வாய்ந்த சங்கீத, சித்திர ஆசிரியர்கள் இருந்தும் அவர்கள் தமது ஆற்றல்களை முழுமையாக வெளிப்படுத்தி மாணவர்களை வழிப்படுத்த வசதியான வகுப்பறைகளோ, பிற உபகரண சாதனங்களோ இல்லாதது இன்னுமொரு பக்கத்தால் எழுந்து நிற்கும் பிரச்சனைகளாகும், இவற்றுக்கும் எதிர்காலத்தில் நாம் பொருத்தமான தீர்வினைக் காணவேண்டிய கட்டாயத்திலுள்ளோம்.

## 6. சிறுவர் முற்றம்.

எமது வித்தியாலய ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு, அவர்களது திறன்கள் முழுமையாக வளர்க்கப்பட ஒரு தகுந்த சிறுவர் முற்றம் இல்லாதிருந்தமை பெரிய குறைபாடாகவே இருந்தது. இதனை நிவர்த்தி செய்யும் வகையில் எமது விதியாலயத்தின் பழைய மாணவரும் எமது பாடசாலையின் மேம்பாட்டில் மிகவும் அக்கறை கொண்டவருமான கலாநிதி செல்லப்பா நடராஜாவின் மைந்தன் திரு ந. மகிழ்னன் 3.5 லட்சம் ரூபா செலவில் சிறுவர் முற்றம் ஒன்றை அமைத்துத் தருவதற்கு ஒப்புதல் அளித்து, முதற்கட்டமாக ரூபாய் 2 லட்சம்

முற்பணமாக வழங்கியுள்ளார். இது தொடர்பாக, எமது பாடசாலை அபிவிருத்திச் சங்க நிர்வாக சபை கூடி ஆராய்ந்து, யாழ்ப்பாணம் புரோ மோட்டர்ஸ் நிறுவனத்தினரிடம் இவ்வேலைத் திட்டத்தை முடித்துத் தரும்படி கூறி ஒப்படைத்துள்ளது. இவை தொடர்பான வேலைகள் வேகமாக நடைபெற்று வருகின்றன. இப் பேருதவியை வழங்கிய திரு. ந. மகிழ்னன் அவர்களது குடும்பத்திற்கு இறை ஆசியை வேண்டுவதோடு, எமது வித்தியாலய சமூகம் சார்பாக தலை சாய்ந்து நன்றிகளை இச் சந்தர்ப்பத்தில் மகிழ்வோடு தந்து நிற்கின்றோம்.

## 7. தளபாடப் பற்றாக்குறை

எமது வித்தியாலயத்தில் மாணவர் தொகை தற்போது படிப்படியாக உயர்வடைந்து வருகிறது. இடப்பெயர்வின் போது, அன்றிருந்த மாணவர் தொகைக்கு ஏற்ப போதுமான தளபாடங் கள் கிடைத்தன. இருப்பினும் தற்போது மாணவர் எண்ணிக்கை படிப்படியாக அதிகரித்துச் செல்வதனால் தளபாடப் பற்றாக்குறை நாளுக்கு நாள் அதிகரித்து வரும் ஒரு பிரச்சனையாக உள்ளது. குறிப்பாக, ஆரம்ப, இடைநிலை, மட்ட மாணவர் களிற்கும், நூலகம், மற்றும் அலுவலக தேவைகளுக்கும் தளபாடங்கள் குறைவாகவே உள்ளமை குறிப்பிடத்தக்கது. இவற்றை நிறைவு செய்வதற்கு நாம் பல்வேறு தரப்பினர்களிடமும் உதவிகளை நாடி நிற்கின்றோம்.

## 08. உள்ளக விளையாட்டு அறை இன்மை:

எமது மாணவர்களிடம் பல்வேறு திறமைகள் மறைந்து கிடக்கின்றன. குறிப்பாக, உள்ளக விளையாட்டுக்களான, கரம்போட், சதுரங்கம், பெட்மின்ரன் போன்ற விளையாட்டுக் களில் அவர்கள் திறமையானவர்களாக உள்ளனர். இவற்றுக்கு தேவையான விளையாட்டு உகரணங்கள் இருந்தும், இவற்றைப்

பயன்படுத்தி மாணவர்கள் விளையாடுவதற்கு ஏற்றதான ஒரு இடம் இல்லாதிருப்பது குறைபாடாகவே உள்ளது. இவற்றைப் போக்கும் முன் முயற்சிகளில் நாம் ஈடுபட்டிருப்பினும், இதுவரை எம்மால் இத்தேவைகளை மாணவர்களுக்கு பூர்த்தி செய்து கொடுக்க முடியாதிருப்பது பெரிதும் கவலை தருவதாகவே உள்ளது.

எமது மாணவர்கள் உள்ளக விளையாட்டுக்களிலும் சாதனை படைக்க வேண்டும் என்ற மனவிருப்போடு. எமது பாடசாலைக்கான சதுரங்கப் பலகை மற்றும் சதுரங்கக் காய்களை கொள்வனவு செய்து தந்த யாழ் பல்கலைக் கழக பொருளியல் துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் அவர்களுக்கு நன்றிகூறி நிற்கின்றோம்.

## 09. பாடசாலையின் பிரதான மண்டபம் உள்ளிட்ட ஆரம்ப பிரிவு வகுப்பறைக்கான மின் இணைப்பு:

கற்பித்தல் கற்றல் செயற்பாடுகளை இலகுபடுத்த இன்று பல்வேறு இலத்திரனியல் சாதனங்கள் பயன்பாட்டுக்கு வந்துள்ளன. நாமும் அவ்வாறான சாதனங்களைப் பயன்படுத்தி மாணவர்களது கற்றல் தேர்ச்சி மட்டங்களை உயர்த்துவதோடு, அவ்வகைச் சாதனங்கள் தொடர்பான அறிவையும் மாணவர்களுக்கு வழங்க வேண்டும். இவ்வாறான சாதனங்கள் பயன்படுத்தப்படுவதற்கு மின்சார வசதி அதி முக்கியமான ஒன்றாகும், மிகவிரைவில் எமது கிராமத்துக்கு மின் இணைப்பு வழங்கப்பட உள்ளதாக மின்சார சபையில் இருந்து அறிய முடிகின்றது. எனவே இதற்கு ஏற்ப நாமும் எமது வகுப்பறைகளில் மின்சார விநியோக இணைப்புக்களை செய்து கொள்ள வேண்டிய தேவை உண்டு.

**பழைய மாணவர்கள்.**

எமது பாடசாலையின் பழைய மாணவர்களே நீங்கள் இப்பாடசாலைக்கு வழங்கி வரும் உதவிகள் பாராட்டப் படக்கூடியவை. உங்களின் உதவிகளுக்காக பாடசாலைச் சமூகம் உங்களை வாழ்த்தி நிற்கிறது. வறுமைக் கோட்டின் கீழுள்ள இப்பிரதேச மாணவரின் கல்வி வளர்ச்சியில் நீங்கள் காட்டி வரும் ஆர்வத்திற்கும் அர்ப்பணிப்பிற்கும் எமது உளப்பூர்வமான நன்றிகளை அன்போடு தெரிவித்துக் கொள்கிறேன். தொடர்ந்தும் இப்பாடசாலையில் வளர்ச்சிக்கு கைகொடுத்து உதவுவீர்கள் என்ற நம்பிக்கை எமக்குண்டு.

## 10. ஒலிபெருக்கிச் சாதனம் கொள்வனவு செய்தல்

எமது வித்தியாலயத் தேவைக்காக 1980 களில் நாம் பயன்படுத்தி வந்த ஒலிபெருக்கி சாதனம் திருட்டுப் போனதன் பின்னர், மாணவர்களது கலை விழாக்கள் உள்ளிட்ட நிகழ்வுகளுக்கு தனியாளிடம் இருந்தே வாடகைக்கு ஒலி பெருக்கி சாதனங்களைப் பெற்று பயன்படுத்தி வருகின்றோம். அது எமக்கு பல்வேறு சிரமங்களையும் காலதாமதங்களையும் ஏற்படுத்தி வருகின்றது. எனவே நாம் எமது வித்தியாலயத் துக்கென ஒரு ஒலிபெருக்கி சாதனத் தொகுதியினைப் பெற முயன்று வருகின்றோம். சாதனைகளை நோக்கிய எமது பயணம் உங்கள் அனைவரது ஒத்துழைப்போடும் தொடரும்.

இறுதியாக இங்கே எமத அழைப்பை ஏற்று வருகை தந்திருக்கும், பிரதம விருந்தினர் அவர்களுக்கும், அவர்தம் பாரியாருக்கும், சிறப்பு விருந்தினர் அவர்களுக்கும் மற்றும் பெற்றோர்கள், பழைய மாணவர்கள் நலன்விரும்பிகள் அனைவரிற்கும் எமது நன்றிகளைக் கூறி அமர்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

# அதிபர், ஆசிரியர் விபரம் - 2004

| | | |
|---|---|---|
| 01. | திருமதி. வ. மேகலிங்கம் | *B.A Dip - in - Ed* <br> *Principal S.L.P.S Gr I* |
| 02. | திருமதி. சு. செல்வராசா | *B.A. Dip. in Ed* <br> *Deputy Principal* |
| 03. | திரு. ஆ. க. ரவீந்திரன் | *B.A. Dip in Ed* <br> *Sectional Head* |
| 04. | திரு. சு. கிருபானந்தன் | *Dip in Agr* <br> *Supervisor (6-8)* |
| 05. | திருமதி. மீ. பரமேஸ்வரன் | *Primary Trd.* <br> *Sectional Head* |
| 06. | திரு. க. கதிரவேல் | *English Trd.* |
| 07. | திரு. தி. அற்புதராஜா | *Maths Trd.* |
| 08. | திரு. சி. மதியழகன் | *B. Com. Primary Trd.* |
| 09. | திரு. வே. க. சந்திரகுமார் | *B.Sc (Ad). Dip. in. Ed* |
| 10. | திரு. நா. கருணாகரன் | *Commerce Trd.* |
| 11. | திரு. மு. செங்கையாழியான் | *Science Trd.* |
| 12. | திரு. ந. புகன்ஶ்ரீந்திரன் | *B.A. (Hons) Dip in Ed* |
| 13. | திரு. ப. கிருபானந்தன் | *G.C.E. (A/L)* |
| 14. | திருமதி. யோ. செல்வநாயகம | *Music Trd.* |
| 15. | திருமதி. யோ. பாலச்சந்திரன் | *Hindusim Trd.* |
| 16. | திருமதி. ஞா. மரியநாயகம். | *R.C. Trd.* |
| 17. | திருமதி.கோ. சிவனொளிச்செல்வன் | *B.com (Hons) Dip.in.Ed* |

| | | |
|---|---|---|
| 18. | திருமதி. ச. தபேந்திரன் | *B.A. Dip in Ed* |
| 19. | திருமதி. ந. குகராஜ். | *English Trd.* |
| 20. | திருமதி. நா. செல்வன். | *Primary Trd.* |
| 21. | திருமதி. வி. நந்தகுமார் | *B.A (Special Gy) Dip.in.Ed* |
| 22. | திருமதி. மா. புலேந்திரராஜா | *B.A Dip in Ed.* |
| 23. | திருமதி. ந. மகேந்திரன் | *Home Eco Trd.* |
| 24. | செல்வி. ச. தயாநிதி | *Maths Trd.* |
| 25. | செல்வி. அ. சுபாங்கினி | *Science Trd.* |
| 26. | செல்வி. ச. சத்தியமலர் | *Primary Trd* |
| 27. | செல்வி. க. புஸ்பராணி | *G.C.E. A/L* |
| 28. | திருமதி. சி. ஜீவராஜா | *B.A(Hons) Management Assistant* |
| 29. | செல்வி. ம. சுதர்சினி | *Valunteer* |
| 30. | செல்வி. இ. மரியஸ்வர்ணா | *Valunteer* |
| 31. | செல்வி. அ. ரூபசி | *Valunteer* |
| 32. | செல்வி. க. துளசினி | *Valunteer* |
| 33. | திரு. சி. இராஜேஸ்வரன் | ஆய்வுகூட உதவியாளர் |

## கல்வி சாரா ஊழியர்கள்

01. திரு. செ. அழகராசா
02. திரு. சி. இராஜேஸ்வரன்
03. திரு. தி தங்கவேல்
04. திரு. க. செல்வன்

## பரிசு பெறுவோர் விபரம்

### திருக்குறள் போட்டி 2004

01. வி. லவலக்ஷனா தரம் 1
02. பு. வைஸ்ணவி தரம் 2
03. பா. சுயந்தன் தரம் 2

### அறநெறிப் போட்டி 2004

01. வி. லவலக்சனா தரம் 1
02. மா. சிவறதன் தரம் 2
03. ச. கஜேந்தினி தரம் 4
04. செ. இந்திரவதனா தரம் 4

### ஆங்கில தினப்போட்டி 2004

01. ச. கஜேந்தினி தரம் 4
02. கோ. அரவிந்தன் தரம் 4

### தமிழ்த்தினப் போட்டி

01. ச. நிருபா தரம் 5

### கண்காட்சிப் போட்டி

01. ச. கஜேந்தினி தரம் 4
02. ச. லவண்யா தரம் 5

## சிறப்புத் தேர்ச்சி பெற்றோர்

### தரம் 2

01. மா. சிவறதன் - கணிதம், தமிழ், சுற்றாடல், சமயம்.
02. பா. சுயந்தன் - கணிதம், சுற்றாடல், சமயம்
03. பா. திலக்சன் - கணிதம், சுற்றாடல், சமயம்
04. ஜெ. நிஷாந் - கணிதம், தமிழ், சுற்றாடல். சமயம்.
05. பு. வைஸ்ணவி - கணிதம். தமிழ், சுற்றாடல், சமயம்
06. கோ. தாரங்கினி - கணிதம். தமிழ், சுற்றாடல், சமயம்
07. இ. தேனுகா - கணிதம். தமிழ், சுற்றாடல், சமயம்
08. சு. அபிராமி - கணிதம். தமிழ், சுற்றாடல், சமயம்
09. கோ. கலையரசன் - கணிதம், சமயம்
10. ஜெ. லதன் - தமிழ், சமயம்
11. அ. மோசேஜன் - கிறிஸ்தவம்

## சிறப்புத் தேர்ச்சி பெற்றோர்

### தரம் 3

01. ச. லக்சிகா - சுற்றாடல், சமயம், கணிதம், தமிழ்
02. செ. லுசியா - சுற்றாடல், தமிழ்
03. ர. நிதர்சன் - சுற்றாடல், சமயம், கணிதம், தமிழ்
04. ச. சஞ்சீவி - சுற்றாடல். சமயம், கணிதம். தமிழ்
05. இ. கல்யாணி - சுற்றாடல், சமயம், கணிதம், தமிழ்
06. பு. டுவாரதா - சுற்றாடல்
07. மோ. டிசாளினி - சுற்றாடல், கணிதம், தமிழ்
08. இ. தேனுசா - சுற்றாடல், கணிதம், தமிழ், சமயம்
09. ஜெ. பிரசாந் - சுற்றாடல். கணிதம், தமிழ், சமயம்
10. இ. பிரியந்தினி - சுற்றாடல். கணிதம், தமிழ், சமயம்
11. இ. கஸ்தூரி - சமயம், கணிதம், தமிழ்
12. அ. புஸ்பமலர் - கிறிஸ்தவம்
13. த. துஷாந்தினி - கிறிஸ்தவம்
14. தா. யோண்போல் - கிறிஸ்தவம்
15. சு. வினுசாந் (சிறந்த மாணவன்) தரம் 3B

## சிறப்புத் தேர்ச்சி பெற்றோர்
### தரம் 4

01. ச. கஜேந்தினி - தமிழ், சுற்றாடல், கணிதம், சமயம்
02. ப. லக்சன் - தமிழ், சுற்றாடல், கணிதம், சமயம்
03. கோ. அரவிந்தன் - தமிழ், சுற்றாடல், கணிதம், சைவசமயம், ஆங்கிலம்
04. மா. சிவகண்ணன் - தமிழ், சுற்றாடல்
05. அ. மேரிஜென்சியா - தமிழ், சுற்றாடல், கணிதம், கிறிஸ்தவம்
06. செ. இந்திரவதனா - தமிழ், கணிதம், சுற்றாடல்
07. அ. அற்புதமலர் - கிறிஸ்தவம்
08. பொ. தனுவின் சிறந்த மாணவன்

## சிறப்புத் தேர்ச்சி பெற்றோர்
### தரம் 5

01. பா. கஜீபன் - தமிழ், சுற்றாடல், கணிதம், சைவசமயம்
02. ச. சிந்துஜா - தமிழ், சுற்றாடல், கணிதம், சைவசமயம், ஆங்கிலம்
03. ச. நிரூபா - தமிழ், சுற்றாடல், கணிதம், சைவசமயம், ஆங்கிலம்
04. ச. லவண்யா - தமிழ், சுற்றாடல், கணிதம், சைவசமயம்,
05. ஞா. தீபிகா - கிறிஸ்தவம்

## சிறப்புத் தேர்ச்சி பெற்றோர்
### தரம் 6

01. ச. தர்மினி - தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம், ஆங்கிலம்
02. ச. கேமா - தமிழ், சுற்றாடல், சமயம், கணிதம், ஆங்கிலம்
03. சி. சங்கீதா - தமிழ், சுற்றாடல், சமயம்,

04. தி. சுதர்ஜினி - தமிழ், சுற்றாடல், சமயம், ஆங்கிலம்

05. இ. பரந்தாமன் - கணிதம், ஆங்கிலம்

06. சி. சுயன்சா - தமிழ், சுற்றாடல்

07. மோ. டிலக்சனா - தமிழ், சுற்றாடல், ஆங்கிலம்

08. த. சௌமியா - தமிழ்

09. ப. லகிந்தன் - கணிதம்

10. சி. கம்சியா - சுற்றாடல், சமயம்

11. க. கஜனி - கிறிஸ்தவம்

12. த. திபாகரன் - கிறிஸ்தவம்

13. சி. தனுஸ்கரன் - கிறிஸ்தவம்

14. இ. கஜேந்திரன் சிறந்த மாணவன் - 6B

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தோர் - 2003

01. செல்வன். இ. பரந்தாபன்

02. செல்வி. ச. தர்மி[illegible]

03. செல்வி. சி. சங்கீதா

04. செல்வி. தி. சுதர்ஜினி

05. செல்வி. ச. கேமா

## சிறுவர் நாடகம்

01. சிவகண்ணன். மா

02. டிலக்சன்.ச

03. கஜீபன். பா

04. கஜேந்தினி. ச

05. லக்சிகா. ச

06. பேபிசாளினி. சி

07. துஷ்யந்தன். கு

08. மேரிஜென்சியா. அ

09. இந்திரவதனா. செ

10. சிந்துயா. ச

11. நிரூபா. ச

12. நிதூசனா. கு

13. லவண்யா. ச

14. சிவானுஜா. ச

15. கீர்த்தனா. தி

## தரம் 6

| | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| 01. | அ. நிறோஜினி | தமிழ் | முதலாமிடம் |
| | | கணிதம் | முதலாமிடம் |
| | | இந்துசமயம் | முதலாமிடம் |
| | | ஆங்கிலம் | இரண்டாமிடம் |
| | | சுற்றாடல் | மூன்றாமிடம் |
| | | | |
| 02. | அ. சுவர்ணா | சுகாதாரம் | முதலாமிடம் |
| | | சுற்றாடல் | முதலாமிடம் |
| | | அழகியல் | முதலாமிடம் |
| | | தமிழ் | இரண்டாமிடம் |
| | | கணிதம் | இரண்டாமிடம் |
| | | பொதுத்திறமை | மூன்றாமிடம் |
| | | | |
| 03. | இ. வேஜினி | ஆங்கிலம் | முதலாமிடம் |
| | | கத்தோலிக்கம் | முதலாமிடம் |
| | | பொதுத்திறமை | முதலாமிடம் |
| | | தமிழ் | மூன்றாமிடம் |
| | | | |
| 04. | நி. நிக்சன் | சுகாதாரம் | இரண்டாமிடம் |
| | | சுற்றாடல் | இரண்டாமிடம் |
| | | பொதுத்திறமை | இரண்டாமிடம் |
| | | அழகியல் | இரண்டாமிடம் |
| | | ஆங்கிலம் | மூன்றாமிடம் |
| | | | |
| 05. | பா. பிரியா | இந்துசமயம் | இரண்டாமிடம் |
| | | கணிதம் | மூன்றாமிடம் |
| 06. | ஜே.அனன்சியாற்றாயாழினி | கத்தோலிக்கம் | இரண்டாமிடம் |

| | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| 07. | த. திலக் | சுகாதாரம் | மூன்றாமிடம் |
| 08. | க. சுபாஜினி | இந்துசமயம் | மூன்றாமிடம் |
| | | | |
| 09. | த. ஜோஜஸ் | கத்தோலிக்கம் | மூன்றாமிடம் |
| | | | |
| 10. | விமல்ராஜ் | அழகியல் | மூன்றாமிடம் |
| | | | |
| | | **தரம் 7** | |
| 01. | இ. சுரேக்கா | தமிழ் | முதலாமிடம் |
| | | விஞ்ஞானம் | முதலாமிடம் |
| | | ஆங்கிலம் | முதலாமிடம் |
| | | சமூகக்கல்வி | முதலாமிடம் |
| | | இந்துசமயம் | முதலாமிடம் |
| | | நடனம் | முதலாமிடம் |
| | | சுகாதாரம் | இரண்டாமிடம் |
| | | பொதுத்திறமை | இரண்டாமிடம் |
| | | கணிதம் | மூன்றாமிடம் |
| | | | |
| 02. | மோ. டிலானி | கணிதம் | முதலாமிடம் |
| | | சுகாதாரம் | முதலாமிடம் |
| | | பொதுத்திறமை | முதலாமிடம் |
| | | ஆங்கிலம் | இரண்டாமிடம் |
| | | இந்துசமயம் | இரண்டாமிடம் |
| | | சங்கீதம் | இரண்டாமிடம் |
| | | தமிழ் | மூன்றாமிடம் |
| | | விஞ்ஞானம் | மூன்றாமிடம் |
| | | சமூகக்கல்வி | மூன்றாமிடம் |
| | | | |
| 03. | அ. நற்கருணைராஜ் | கத்தோலிக்கம் | முதலாமிடம் |
| | | | |
| 04. | ஆ. கஜேந்தினி | சங்கீதம் | முதலாமிடம் |

| | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| | | விஞ்ஞானம் | இரண்டாமிடம் |
| 05. | ர. குலறஞ்சினி | தமிழ் | இரண்டாமிடம் |
| | | நடனம் | இரண்டாமிடம் |
| | | சமூகக்கல்வி | மூன்றாமிடம் |
| | | இந்துசமயம் | மூன்றாமிடம் |
| | | | |
| 06. | க. யனாத் | கணிதம் | இரண்டாமிடம் |
| | | சுகாதாரம் | மூன்றாமிடம் |
| | | | |
| 07. | ச. பிரதாப் | சமூகக்கல்வி | இரண்டாமிடம் |
| | | சங்கீதம் | மூன்றாமிடம் |
| | | | |
| 08. | இ. லக்சிகா | நடனம் | மூன்றாமிடம் |
| | | | |
| 09. | ச. கிஷானி | ஆங்கிலம் | மூன்றாமிடம் |
| | | பொதுத்திறமை | மூன்றாமிடம் |
| | | | |
| | | **தரம் 8** | |
| 01. | அ. அகலிகா | தமிழ் | முதலாமிடம் |
| | | ஆங்கிலம் | முதலாமிடம் |
| | | சங்கீதம் | முதலாமிடம் |
| | | இந்துசமயம் | முதலாமிடம் |
| | | பொதுத்திறமை | முதலாமிடம் |
| | | கணிதம் | இரண்டாமிடம் |
| | | சமூகக்கல்வி | இரண்டாமிடம் |
| | | சுகாதாரம் | இரண்டாமிடம் |
| | | விஞ்ஞானம் | மூன்றாமிடம் |
| | | | |
| 02. | பா. நிலோஜன் | கணிதம் | முதலாமிடம் |
| | | சங்கீதம் | மூன்றாமிடம் |
| | | | |

| | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| 03. | கோ. ருசாந்தா | விஞ்ஞானம் | முதலாமிடம் |
| | | சமூகக்கல்வி | முதலாமிடம் |
| | | தமிழ் | இரண்டாமிடம |
| | | சங்கீதம் | இரண்டாமிடம |
| | | பொதுத்திறமை | இரண்டாமிடம |
| | | ஆங்கிலம் | மூன்றாமிடம் |
| | | சுகாதாரம் | மூன்றாமிடம் |
| | | இந்துசமயம் | மூன்றாமிடம் |
| | | | |
| 04. | ச. கிருஸ்ணதாஸ் | சுகாதாரம் | முதலாமிடம் |
| | | விஞ்ஞானம் | இரண்டாமிடம் |
| | | தமிழ் | மூன்றாமிடம் |
| | | | |
| 05. | சி. தனுஸ்ரா | கத்தோலிக்கம் | முதலாமிடம் |
| | | | |
| 06. | அ. நிசாளினி | ஆங்கிலம் | இரண்டாமிடம் |
| | | சமூகக்கல்வி | இரண்டாமிடம் |
| | | இந்துசமயம் | இரண்டாமிடம் |
| | | கணிதம் | மூன்றாமிடம |
| | | பொதுத்திறமை | மூன்றாமிடம |
| | | | |
| 07. | அ. மரியமலர் | கத்தோலிக்கம் | இரண்டாமிடம |
| | | | |
| 08. | மே. பிரான்சிஸ் | கத்தோலிக்கம் | மூன்றாமிடம் |
| **தரம் 9** | | | |
| **மாகாண மட்டப் பரீட்சையில் சிறப்புத் தேர்ச்சி** | | | |
| 01. | ச. சிறோமி | தமிழ் | A |
| | | சமயம் | A |
| | | கணிதம் | A |
| | | நடனம் | A |
| | | பொதுத்திறமை | |

| | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| 02. | க. தீபக் | கணிதம் | A |
| | | சமயம் | A |
| | | பொதுத்திறமை | |
| | | | |
| 03. | சி. சுயனகா | சமயம் | A |
| | | சங்கீதம் | A |
| | | பொதுத்திறமை | |
| | | | |
| 04. | ந. கோமதி | சமயம் | A |
| | | சங்கீதம் | A |
| | | | |
| 05. | வி. லவப்பிரியா | சங்கீதம் | A |
| | | | |
| 06. | அ. மேரிறொன்சியா | சங்கீதம் | A |
| | | | |
| | **தரம் 10** | | |
| 01. | பா. கிருபாலினி | தமிழ் | முதலாமிடம் |
| | | சமூகக்கல்வி | முதலாமிடம் |
| | | இந்துசமயம் | முதலாமிடம் |
| | | பொதுத்திறமை | முதலாமிடம் |
| | | சங்கீதம் | முதலாமிடம் |
| | | கணிதம் | இரண்டாமிடம் |
| | | விஞ்ஞானம் | இரண்டாமிடம் |
| | | ஆங்கிலம் | இரண்டாமிடம் |
| | | வர்த்தகம் | இரண்டாமிடம் |
| | | | |
| 02. | த. மௌலியா | கணிதம் | முதலாமிடம் |
| | | விஞ்ஞானம் | முதலாமிடம் |
| | | ஆங்கிலம் | முதலாமிடம் |
| | | வர்த்தகம் | முதலாமிடம் |
| | | தமிழ் | இரண்டாமிடம் |
| | | சமூகக்கல்வி | இரண்டாமிடம் |

| | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| | | இந்துசமயம் | இரண்டாமிடம் |
| | | சங்கீதம் | இரண்டாமிடம் |
| | | பொதுத்திறமை | இரண்டாமிடம் |
| | | | |
| 03. | மு. இளங்கோ | விவசாயம் | முதலாமிடம் |
| | | தமிழ் | மூன்றாமிடம் |
| | | கணிதம் | மூன்றாமிடம் |
| | | விஞ்ஞானம் | மூன்றாமிடம் |
| | | சமூகக்கல்வி | மூன்றாமிடம் |
| | | இந்துசமயம் | மூன்றாமிடம் |
| | | பொதுத்திறமை | மூன்றாமிடம் |
| | | | |
| 04. | கு. அஜந்தா | மனைப்பொருளியல் | முதலாமிடம் |
| | | சங்கீதம் | மூன்றாமிடம் |
| | | | |
| 05. | ப. கார்த்திக் | கடல்வளம் | முதலாமிடம் |
| | | | |
| 06. | தே. நிஷாந்தினி | மனைப்பொருளியல் | இரண்டாமிடம் |
| | | | |
| 07. | அ. சுபன் | விவசாயம் | இரண்டாமிடம் |
| | | | |
| 08. | ஜே. தார்மீகன் | கடல்வளம் | இரண்டாமிடம் |
| | | | |
| 09. | ஜோ. பிரான்சிஸ்கா | ஆங்கிலம் | மூன்றாமிடம் |
| 10. | பூ. தர்மறஞ்சினி | வர்த்தகம் | மூன்றாமிடம் |
| | | | |
| 11. | சி. ரேகா | மனைப்பொருளியல் | மூன்றாமிடம் |
| | | | |
| 12. | செ. பிரதீபன் | விவசாயம் | மூன்றாமிடம் |
| | | | |
| 13. | இ. விஜேந்திரன் | கடல்வளம் | மூன்றாமிடம் |
| | | | |

| | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| | **தரம் 11** | | |
| | **க.பொ.த.சாதாரண தரப் பரீட்சையில் சித்தி அடைந்தமை** | | |
| 01. | இ. சுதர்சன் | க.பொ.த சாதாரண தரமும் பொதுத்திறமையும் | |
| | | | |
| 02. | சி. கனிஸ்ரா | க.பொ.த சாதாரண தரமும் பொதுத்திறமையும் | |
| | | | |
| 03. | சி. துஸ்யந்தினி | க.பொ.த. சாதாரணதரம் | |
| | | | |
| 04. | க. ரவீந்திரன் | க.பொ.த சாதாரண தரமும் பொதுத்திறமையும் | |
| | | | |
| | **தரம் 12** | | |
| 01. | நா. கார்த்திகாயினி | தமிழ் | முதலாமிடம் |
| | | இந்துநாகரிகம் | முதலாமிடம் |
| | | அளவையியல் | முதலாமிடம் |
| | | பொதுத்திறமை | முதலாமிடம் |
| 02. | அ. ஜென்சிமேரி | கிறிஸ்தவ நாகரிகம் | முதலாமிடம் |
| 03. | இ. றஜீவா | சங்கீதம் | முதலாமிடம் |
| | | | |
| 04. | க. கஜேந்தினி | தமிழ் | இரண்டாமிடம் |
| | | அளவையியல் | இரண்டாமிடம் |
| | | பொதுத்திறமை | இரண்டாமிடம் |
| | | இந்துநாகரிகம் | மூன்றாமிடம் |
| 05. | வீ. சுயந்தினி | இந்துநாகரிகம் | இரண்டாமிடம் |
| | | தமிழ் | மூன்றாமிடம் |
| | | அளவையியல் | மூன்றாமிடம் |
| | | பொதுத்திறமை | மூன்றாமிடம் |
| | **தரம் 13** | | |
| 01. | கு. கவிதா | தமிழ் | முதலாமிடம் |
| | | இந்துநாகரீகம் | முதலாமிடம் |

| | பெயர் | பாடங்கள் | நிலை |
|---|---|---|---|
| | | அளவையியல் | முதலாமிடம் |
| | | பொதுத்திறமை | முதலாமிடம் |
| | | | |
| 02. | இ. மரியசுகந்தி | கிறீஸ்தவ நாகரீகம் | முதலாமிடம் |
| | | தமிழ் | இரண்டாமிடம் |
| | | பொதுத்திறமை | இரண்டாமிடம் |
| | | அளவையியல் | மூன்றாமிடம் |
| | | | |
| 03. | கு. குவேந்தினி | இந்துநாகரீகம் | இரண்டாமிடம் |
| | | அளவையியல் | இரண்டாமிடம் |
| | | தமிழ் | மூன்றாமிடம் |
| | | பொதுத்திறமை | மூன்றாமிடம் |
| | | | |
| 04. | ப. சுபோதினி | இந்து நாகரீகம் | மூன்றாமிடம் |
| | | | |

## ஏனைய பரிசில்கள்

01. **விளையாட்டு - வலயமட்டம்**

- 17 வயதுப் பிரிவு - பெண்

  அ. மேரிறொன்சியா - 400m, 800m - 1ம் இடம்
  சி. சுயனகா - நீளம் பாய்தல் - 1ம் இடம்

- 17 வயதுப் பிரிவு - ஆண்

  ஜெ. தார்மீகன் - நீளம்பாய்தல் - 1ம் இடம்
  இ. கபில்ராஜ். - முப்பாய்ச்சல் - 2ம் இடம்

- 19 வயதுப்பிரிவு - ஆண்

  சி. றஜிதாஸ் - 400m, தடைதாண்டல் -1ம் இடம்

02. **தமிழ்த்தினம் - வலயமட்டம்**

**கவிதையாக்கம்**

த. மௌலியா - 2ம் இடம்

**மறைமாவட்டப் போட்டி**

அ. மேரிறொன்சியா
தோ. டினோ

**வில்லிசைக்குழு**

த. தீபன்
சு. கஜீபன்
ப. கார்த்திக்
இ. விஜேந்திரன்
ர. றஞ்சித்
இ. யோகேஸ்வரன்
வே. அகிலன்

பிரிவு 2

கட்டுரை
நிறோஜினி

இலக்கணம் - பிரிவு 4

பா. கிருபாலினி 2ம் இடம்

பிரிவு 5
நா. கார்த்திகாயினி - 2ம் இடம்

அகில இலங்கை ரீதியிலான கட்டுரைப் போட்டி - சிறப்புத் தேர்ச்சி
பா. கிருபாலினி

அகில இலங்கை ரீதியிலான முதியோர் நலம் பேணல் - கட்டுரை
வி. லவப்பிரியா - இரண்டாமிடம்



கல்விக் கண்காட்சி 2004, மங்கள விளக்கேற்றல் திருமதி. பு. பொன்னம்பலநாதன்
திறந்து வைப்பவர் திரு. நா. சத்தியநாதன்



கல்விக் கண்காட்சி - 2004, அதிபருடன் உதவிக் கல்விப் பணிப்பாளர்



கல்விக் கண்காட்சி - 2004, ஆரம்பப் பிரிவு ஆசிரியர்களும் மாணவர்களும்



கெல்ப்ஏஜ் நிறுவனப் பரிசளிப்பு நிகழ்வில் பரிசு பெறுபவர் செல்வி. வி. லவப்பிரியா



இந்து சமய விழா - 2004, உப அதிபரும், உயர்நிலைப் பிரிவின் மேற்பார்வையாளரும்



இல்ல மெய்வல்லுநர் போட்டி - 2004 பிரதம விருந்தினர்
பேராசிரியர் வி. பி. சிவநாதன்



ஒளி விழா 2003ல் கிறீஸ்தவ மன்றப் பொறுப்பாசிரியர்
திருமதி. ஞா. மரியநாயகம்

## நிதி விபரங்கள்

| | |
|---|---|
| மாணவர்கள் | 13025.00 |
| நலன் விரும்பிகள் | 11300.00 |
| ஆசிரியர்கள் | 6400.00 |
| மொத்த தொகை | 30725.00 |

மண்ணும் மா நிலமும்

மனித குலத்துக்கு மட்டுமே சொந்தமானதல்ல.

இயற்கையை நாம் அழித்தால்

இயற்கையால் நாம் அழிவோம்.

தேசிய மரநடுகை மாதம் ஐப்பசி 2004

யா/ நாவற்குழி ம. வி

தயா அச்சகம் கொம்பியூட்டர் ஓவ்(f)செற் பிறின்ட்
38, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். (நாவலர் பாடசாலை முன்பாக) T. P. 2881